[பேரவைத் தலைவர்] [1996 மார்ச் 1

20-2-1996 அன்று வேதாரண்யம் கடல் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பிரச்சினை பற்றிப் பேரவையில் எழுப்பி அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். *(குறுக்கீடுகள்)*

(ஆ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அது அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை. நீங்கள் அறையில் வந்து என்னிடத்தில் ஓரலாகக் கேட்டீர்கள். கேட்டதற்கு, அதை எழுப்ப முடியாது என்று சொல்லிவிட்டேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்பினால் அது அவைக் குறிப்பிலே இருக்காது. *(குறுக்கீடு)* நான் அனுமதி மறுத்திருக்கிறேன். விதி எண் 58-ஐ எடுத்துப் படித்துப் பாருங்கள் *(குறுக்கீடு)* திரு. டேனியல்ராஜ் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் தடுக்க முடியாது. நான் உங்களைத் தடுக்கவில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. *(குறுக்கீடு)* அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. *(குறுக்கீடுகள்)* வேதாரண்யம் மீனவர்கள் பிரச்சினையை எடுத்து கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு.எஸ். டேனியல்ராஜ், திரு. மா. சுந்தரதாஸ், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், திருமதி ஜெ. லோகாம்பாள், திரு. பி.வி. இராஜேந்திரன் மற்றும் திரு.ப. ரங்கநாதன் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) நாகப்பட்டினம் கடல் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேதாரண்யம் கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ள பிரச்சினை பற்றிப் பேரவையில் எழுப்பி, பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று திரு. எஸ். டேனியல்ராஜ்,